T

Reg. No.: 

# முழு ஆண்டுப் பொதுத் தேர்வு - 2024

## வகுப்பு–9

காலம் : 3.00 மணி

## தமிழ்

மதிப்பெண்கள்:100

### பகுதி - அ

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 15 x 1 = 15

1. அழியாத வனப்பு, ஒழியா வனப்பு, சிந்தாமணி - அடிக்கோடிட்ட சொற்களுக்கான இலக்கணக்குறிப்பு ..........

   அ) வேற்றுமைத்தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

   இ) பண்புத்தொகை ஈ) வினைத்தொகை

2. மல்லல் மூதூர் வயவேந்தே - கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?

   அ) மறுமை ஆ) பூவரசு மரம் இ) வளம் ஈ) பெரிய

3. ஐம்பெருங்குழு, எண்பேராயம் - சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்

   அ) திசைச் சொற்கள் ஆ) வடசொற்கள் இ) உரிச்சொற்கள்

   ஈ) தொகைச் சொற்கள்

4. தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?

   அ) தேசியத் திறனறித் தேர்வு ஆ) ஊரகத் திறனறித் தேர்வு

   இ) தேசியத் திறனறி, கல்வி உதவித்தொகைத் தேர்வு ஈ) மூன்றும் சரி

5. கீழ்க்காண்பனவற்றுள் உணர்ச்சித் தொடர் எது?

   அ) சிறுபஞ்சமூலத்தில் உள்ள பாடல்கள் பெரும்பாலும் மகடூஉ முன்னிலையில் அமைந்துள்ளன.

   ஆ) இந்திய நூலகவியலின் தந்தையென அறியப்படுபவர் யார்?

   இ) என்னண்ணே! நீங்கள் சொல்வதை நம்பவே முடியவில்லை!

   ஈ) வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த இடத்தைப் புத்தகசாலைக்குத் தருக.

6. மரவேர் என்பது ......... புணர்ச்சி

   அ) இயல்பு ஆ) திரிதல் இ) தோன்றல் ஈ) கெடுதல்

7. சொல்லும் பொருளும் பொருந்தியுள்ளது எது?

   அ) வருக்கை - இருக்கை ஆ) புள் - தாவரம்

   இ) அள்ளல் - சேறு ஈ) மடிவு - தொடக்கம்

8. முண்டி மோதும் துணிவே இன்பம் - இவ்வடியில் இன்பமாக உருவகிக்கப்படுவது

   அ) மகிழ்ச்சி ஆ) வியப்பு இ) துணிவு ஈ) மருட்சி

9. 'ஞானம்' என்பதன் பொருள் யாது?

   அ) தானம் ஆ) தெளிவு இ) சினம் ஈ) அறிவு

10. யாமரம் என்பது எந்த நிலத்தில் வளரும்?

    அ) குறிஞ்சி ஆ) மருதம் இ) பாலை ஈ) நெய்தல்

11. தாய்மைக்கு வறட்சி இல்லை என்ற சிறுகதையின் ஆசிரியர் ..........

    அ) சு.சமுத்திரம் ஆ) த.ஜெயகாந்தன் இ) கி.ராஜநாராயணன்

    ஈ) நா.முத்துக்குமார்

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடைதருக.

கல்வி இல்லாத பெண்கள்
களர்நிலம் அந்நி லத்தில்
புல்விளைந் திடலாம் நல்ல
புதல்வர்கள் விளைதல் இல்லை
கல்வியை உடைய பெண்கள்
திருந்திய கழனி அங்கே
நல்லறிவு உடைய மக்கள்
விளைவது நவில வோநான்!

12. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?
அ) இருண்ட வீடு ஆ) குடும்ப விளக்கு
இ) அழகின் சிரிப்பு ஈ) பாஞ்சாலி சபதம்

13. இப்பாடலின் ஆசிரியர் யார்?
அ) பாரதிதாசன் ஆ) பாரதியார் இ) பிச்சமூர்த்தி ஈ) மேத்தா

14. களர்நிலம் – பொருள் கூறுக.
அ) பண்பட்ட நிலம் ஆ) பண்படாத நிலம் இ) நன்செய் ஈ) புன்செய்

15. இப்பாடலில் அமைந்துள்ள அடி எதுகைகளை எடுத்து எழுதுக.
அ) கல்வி – களர்நிலம் ஆ) கல்வி – புல்விளைந்
இ) புல்விளைந் – புதல்வர்கள் ஈ) கல்வி – இல்லாத

## பகுதி – I

### பிரிவு – 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி. (21வது வினா கட்டாய வினா) 4 x 2 = 8

16. தமிழோவியம் கவிதையில் உங்களை மிகவும் ஈர்த்த அடிகள் குறித்து எழுதுக.
17. கண்ணன் புகுந்த பந்தல் எவ்வாறு இருந்தது?
18. 'கூவல்' என்று அழைக்கப்படுவது எது?
19. சாரதா சட்டம் எதற்காக இயற்றப்பட்டது?
20. இடிகுரல், பெருங்கடல் – இலக்கணக் குறிப்புத் தருக.
21. 'தூண்' என முடியும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு – 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. 5 x 2 = 10

22. சொற்களை இணைத்துத் தொடர்களை விரிவுபடுத்துக.
குழந்தை சிரித்தது

23. மரபு இணைச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.
அ) நகமும் சதையும் ஆ) கண்ணும் கருத்தும்

24. கலைச்சொல் தருக.
அ) Download ஆ) Video conference

25. பிழை நீக்கி எழுதுக.
அ) நல்ல தமிழுக்கு எழுதுவோம்
ஆ) குழலியும் பாடத் தெரியும்

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

26. மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.
அ) அணில் பழம் சாப்பிட்டது
ஆ) நேற்று தென்றல் காற்று அடித்தது
27. பொருத்தமான வாய்பாடுகளை வட்டமிடுக.
அ) பகலவன் - காசு/ கருவிளம்/கூவிளங்கனி
ஆ) வெற்றிடம் - நாள்/கூவிளம்/புளிமா
28. பகுபத உறுப்பிலக்கணம் தருக.
வேண்டி

## பகுதி - III

### பிரிவு - 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க. 2 x 3 = 6

29. மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது?
30. மருத்துவர் முத்துலெட்சுமியின் சாதனைகளைக் குறிப்பிடுக.
31. பத்தியைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
கல்வி, வேலைவாய்ப்பு ஆகியவற்றில் ஆண்களுக்கு நிகரான உரிமை பெண்களுக்கும் அளிக்கப்பட வேண்டும். வேலைவாய்ப்பில் ஐம்பது விழுக்காடு இட ஒதுக்கீடு பெண்களுக்குத் தரப்பட வேண்டும். பொருளாதாரத்தில் பெண்கள் பிறரைச் சார்ந்து வாழ வேண்டிய நிலையில் இருக்கக் கூடாது.
வினாக்கள்
1) கல்வி, வேலைவாய்ப்பு ஆகியவற்றில் யாருக்கு நிகரான உரிமை பெண்களுக்கு அளிக்கப்பட வேண்டும்?
2) பெண்களுக்கு வேலைவாய்ப்பில் எத்தனை விழுக்காடு இட ஒதுக்கீடு தரப்பட வேண்டும்?
3) பொருளாதாரத்தில் பிறரைச் சார்ந்து வாழ வேண்டிய நிலையில் யார் இருக்கக் கூடாது?

### பிரிவு - 2

2 x 3 = 6

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி (34ஆவது வினா கட்டாய வினா)

32. அறிவையும் உயிரினங்களையும் தொல்காப்பியம் எவ்வாறு தொடர்புபடுத்துகிறார்?
33. ஏமாங்கத நாட்டில் எவையெல்லாம் ஆயிரக்கணக்கில் இருப்பதாகத் திருத்தக்கதேவர் பாடியுள்ளார்?
34. 'காடெல்லாம்' எனத் தொடங்கும் பெரியபுராணப் பாடலை அடிபிறழாமல் எழுதுக. (அல்லது)
'ஆக்குவது' எனத் தொடங்கும் யசோதர காவியப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

### பிரிவு - 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. 2 x 3 = 6

35. தன்வினை, பிறவினை - எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக.
36. வல்லினம் இட்டும் நீக்கியும் எழுதுவதன் இன்றியமையாமையை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.
37. உருவக அணியை எடுத்துக்காட்டுடன் எழுதுக. (அல்லது)
காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்
கண்டானாம் தான்கண்ட வாறு.
- இக்குறட்பாவில் பயின்றுவரும் தொடைநயத்தை எழுதுக.

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 5 x 5 = 25

38. உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ் - தமிழ் - ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி பத்துப் படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.
(அல்லது)

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



பள்ளியில் நடைபெற்ற இலக்கியமன்ற விழா நிகழ்ச்சி செய்திகளைத் திரட்டித் தொகுப்புரை உருவாக்குக.

39. நயம் பாராட்டுக.

திங்கள்முடி சூடுமலை
தென்றல்விளை யாடுமலை
தங்குபுயல் சூழுமலை
தமிழ்முனிவன் வாழுமலை
அங்கயற்கண் அம்மைதிரு
அருள்சுரந்து பொழிவதெனப்
பொங்கருவி தூங்குமலை
பொதியமலை என்மலையே – குமரகுருபரர்

40. மாணவர்களாக நீங்கள் உங்கள் பெற்றோர் மனம் மகிழுமாறு செய்ய வேண்டிய செயல்கள் ஐந்தினை எழுதுக.

41. மொழி பெயர்க்க.

Once Buddha and his disciples were thirsty. They reached a lake. But is was muddy because somebody just finished washing their clothes. Buddha asked his disciples to take a little rest there by the tree. After half an hour the disciples noticed that the water was very clear. Buddha said to them, "you let the water and the mud be settled down on its own. Your mind is also like that when it is disturbed, just let it be. Give a little time. It will settle down on its own. We can judge and take best decisions of our life when we stay calm.

42. காட்சியைக் கண்டு கவினுறு எழுதுக.



பகுதி – V

அனைத்து வினாக்களுக்கும் விடையளி. **3 x 8 = 24**

43. ஏறு தழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரிக்க.

(அல்லது)

இந்திய தேசிய இராணுவத்தின் தூண்களாகத் திகழ்ந்தவர்கள் தமிழர்கள் என்பதைக் கட்டுரை வழி நிறுவுக.

44. தூது அனுப்பத் தமிழே சிறந்தது என்பதற்குத் தமிழ்விடுதூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.

(அல்லது)

பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.

45. நூலகம், நூல்கள் ஆகியன குறித்து அண்ணாவின் வானொலி உரையில் வெளிப்படுகின்ற கருத்துகள் யாவை?

(அல்லது)

'தாய்மைக்கு வறட்சி இல்லை' என்னும் சிறுகதையில் வரும் ஏழைத்தாயின் பாத்திரம் படைப்பை விளக்குக.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com